நீதியினால் ஸ்திரப்பட்டிருப்பாய்; கொடுமைக்குத் தூரமாவாய்; பயமில்லாதிருப்பாய்; திகிலுக்குத் தூரமாவாய், அது உன்னை அணுகுவதில்லை.
ஏசாயா 54:14

# தமிழ் டைம்ஸ்
TAMIL TIMES
Tamil / English - News Paper
முயற்சி செய் ! போராடு !! வெற்றி நிச்சயம் !!!

Regd No : TNBIL/2009/30823
Advt & News Cont: 9444517722
e-mail : tamiltimes77@gmail.com
www.tamiltimes.co.in

Vol - 13 Issue - 8 | July - 2022 | Annual Sub : Rs.24/- Rs.2/-




# RTO அதிகாரிகள் கதறல்...

ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி – என்று ஒரு பழமொழி உண்டு .இது யாருக்குப் பொருந்துகிறதோ, இல்லையோ, தமிழக போக்குவரத்துத் துறைக்கு மிகச் சரியாக பொருந்துகிறது.

ஆம்! எந்த ஆட்சியாக இருந்தாலும் சரி, அரசு விழாக்கள், பெரும் விளையாட்டு நிகழ்ச்சிகள், ஏன் ? ஆளுங்கட்சி மாநாடுகள், பொதுக் கூட்டங்கள் ஆகிய அனைத்திற்கும், தனியார் பஸ்கள், தனியார் பள்ளி வாகனங்கள் ஆகியவற்றை ,கேட்டுப் பெறுவார்களோ, அல்லது மிரட்டி வரவழைப்பார் களோ , அது போக்குவரத்துத் துறை அதிகாரிகளின் பணி என்பது எழுதப்படாத ஒரு சட்டமாகவே உள்ளது. (இந்த பாவங்களை எல்லாம் எங்கு கொண்டு போய் தீர்க்கப்போகிறார்களோ போக்குவரத்து அதிகாரிகள் என்பது தெரியவில்லை)

இதனால் பெரும் மன உளைச்சலுக்கும், கூடவே ஊழலுக்கும் துணை போகும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள், வட்டார போக்குவரத்து அலுவலக,சுகூடீ க்களும், அதன் ஆய்வாளர்களும் மற்றும் தொழில்நுட்பம் அல்லாத பாணியாளர்களும் ஆவர்.

தற்போதும் , போக்குவரத்து துறை அதிகாரிகளுக்கு அப்படி ஒரு இக்கட்டான நிலை ஏற்பட்டிருக்கிறது, ஆம்.விரைவில் நடைபெற உள்ள ''செஸ் ஒலிம்பியாட் '' விளையாட்டு விழாவிற்கு, மாணவ, மாணவிகளை அழைத்து வருவதற்கும், விழாப் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளை அழைத்து வருவதற்கும் வாகனங்களை ஏற்பாடு செய்யும்படி போக்குவரத்துத் துறை அதிகாரி களுக்கு உத்தரவிட்டுள்ளது அரசு.

தமிழகம் முழுவதும், ஒரு RTO அலுவலகத் திற்கு பத்து பேருந்துகள் ஏற்பாடு செய்து அனுப்ப வேண்டும் , என்று கட்டளையிடப்பட்டிருக்கிறது. போக்குவரத்து ஆய்வாளர்களும் உடனடியாக களத்தில் இறங்கி, தனியார் பஸ் உரிமையாளர் களிடம் பேசி பேருந்துகளுக்கு ஏற்பாடு செய்து வருகின்றனர். தனியார் பஸ் உரிமையாளர்களும் ''தலையெழுத்தே ''என்று ஒப்புக் கொண்டுள்ளனர்.

அதே போல் தனியார் பள்ளி உரிமையாளர் களிடம் கேட்கப்பட்டது. ஆனால் என்றுமில்லாத கதையாக அவர்களிடமிருந்து பெரும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இப்படி அடாவடியாக வாகனங் களைக் கேட்பதைக் கண்டித்து வரும் 11–07–2022 அன்று சென்னை சேப்பாக்கத்தில் உள்ள போக்குவரத்துத் துறை கமிஷனர் அலுவலகம் முன்பு அரசை கண்டித்து தனியார் பள்ளி வாகன உரிமையாளர்கள் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளனர்.

சரி, ஏன் இந்த வழக்கத்திற்கு மாறான கொந்தளிப்பு ? அதற்கு இரண்டு காரணங்கள்.

ஒன்று ! இந்த விழாவிற்கு வாகனங்களை டீசல் போட்டு அனுப்புவது மட்டுமில்லாமல் கூடவே மற்றொரு செலவும் வைக்கப்பட்டிருக்கிறது.

அது விழாவை விளம்பரப்படுத்தும் விதமாக முதல்வர் படத்துடன், ''செஸ் ஒலிம்பியாட் '' வாசகங்கள் அடங்கிய கலர் கலரான ஸ்டிக்கர்கள் பஸ் முழுவதும் ஒட்டப்பட வேண்டும் என்று உத்தரவு .இதன்படி அந்த, ஸ்டிக்கர்கள் ஒரு சென்டி மீட்டருக்கு நூறு ரூபாய் என்ற அளவில் ஒரு வாகனத்திற்கு ரூ 40 ஆயிரம் வரை ஆகிறது. இதுவும் வாகனம் அனுப்புகிறவர் தலையில் கட்டப்படுகிறது. வாகனங்களின் நீளம், உயரம் அளவுகளை பொறுத்தும், மற்றும் சிறிய அளவு வாகனங்கள் என்றாலும் ஒட்டப்படும் ஸ்டிக்கர்களை பொறுத்து தொகைகள் குறையும்.

இரண்டாவது, எந்தப் பள்ளியுமே , தங்கள் பள்ளிக்கு தேவையான அளவு வாகனங்கள் வைத்திருப்பதில்லை .இந்த விளையாட்டு விழா பள்ளி நாட்களில், நடைபெறுவதால் , வாகனங்களை அனுப்புவதில் நிர்வாகிகளுக்கு பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.மேலும் இந்த இடத்தில் நாம் ஒரு முக்கிய விஷயத்தை குறிப்பிட வேண்டியுள்ளது.

பெரும்பாலான பள்ளிகள், தங்களது பள்ளி மாணவர்களுக்கு தேவையான வாகனங்களில் பாதியளவு கூட வைத்திருப்பதில்லை. ஒரே ஒரு வாகனத்தை வைத்தும், காலை ஒன்பது மணிக்கு ஆரம்பிக்கும் வகுப்புகளுக்கு, மாணவர்களை காலை ஆறு மணி முதலே பல டிரிப்புகளாக ஏற்றி வந்து , பெற்றோர்களுக்கும், மாணவர்களுக்கும் பெரும் சித்ரவதையை செய்வதோடு, மாணக்கர்களுக்கும் பெரும் மனஉளைச்சலைத் தான் இந்த பள்ளி நிர்வாகிகளால் கொடுக்கப்பட்டு வருகிறது.

இதனால் பல பெற்றோர்கள் , பள்ளிக்கு பஸ் கட்டணம் என்ற '' தண்டத்தையும் ''அழுதுவிட்டு , தங்கள் குழந்தைகளை, வேறு தனியார் வாகனம் மூலமோ, அல்லது தங்களது டுவீலரிலோ பள்ளிக்கு அனுப்பி வைக்கும் அவலம் நடக்கிறது. அரசும் இதைக் கண்டு கொள்வதில்லை. காரணம் பெருகி வரும் மாணவ சக்திக்கு நிகரான பள்ளிகள் வேண்டுமே .

இருந்தாலும் , ஒவ்வொரு பள்ளியும் தங்களுக்கு தேவையான வாகனங்களை கட்டாயம் வைத்திருக்க வேண்டும் என்றும், ஒவ்வொரு வாகனத்திற்கோ, அல்லது மூன்று வாகனத்திற்கு ஒரு வாகனமோ ஒரு ஸ்பேர் பேருந்து இருக்க வேண்டும் என போக்குவரத்து துறையோ அரசோ உத்தரவிட்டிருந்தால், இன்று இது போன்ற நல்லதொரு நிகழ்வுக்கு அதுவும் ,தமிழகத்திற்கு பெயர் வாங்கித் தரும் விளையாட்டுப் போட்டிகளுக்கு வாகனம் இல்லை என்றும், இதற்காக ஒரு போராட்டம் என்ற ஒரு அறிவிப்புகளையும், தனியார் பள்ளிகள் சொல்லும் நிலை ஏற்பட்டிருக்காது. கல்வியை வியாபாரமாக்கி, லட்சங்களும், கோடிகளுமாக வருமானம் ஈட்டி வரும் பள்ளி, கல்லூரி நிர்வாகத்திற்கு எல்லாம் இனி இரண்டோ அல்லது மூன்று பேருந்துகளுக்கு ஒரு ஸ்பேர் வேண்டும் என்ற ஒரு உத்தரவை அரசு உருவாக்கினால் மட்டும்தான் அரசின் நலத்திட்டங்களை அறிந்து செயல்படாதவர்களுக்கு இந்த உத்தரவுகள்தான் அனைத்தையும் புரியவைக்கும்.

அதே போல் பஸ் உரிமையாளர்களின் நிலையும் இதுதான். பஸ்ஸிற்கு பணியாட்கள் மற்றும் எரிபொருட்களையும் கொடுத்து, மேலும் ரு 40 ஆயிரம் ஸ்டிக்கர் செலவு என்றால், அவர்கள் வேதனையும் சொல்லி மாளவில்லை.

இந்த இடத்தில் நாம் மேலும் ஒரு முக்கிய விஷயத்தையும் குறிப்பிட்டே ஆக வேண்டும். இப்படி வலுக்கட்டாயமாக செலவுகள் திணிக்கப்படும் பொழுது, நாளை தனியார் பஸ் உரிமையாளர்களோ, பள்ளி உரிமையாளர்களோ , தங்கள் வாகனங்களை கு.ஊ. எனப்படும் தகுதிச் சான்றிதழ் பெற RTO அலுவலகம் வரும் பொழுது மோட்டார் வாகன அதிகாரிகளால் எப்படி நேர்மையான முறையில் நடந்து கொள்ள முடியும், ஏதோ ஒருவிதத்தில் அந்த பேருந்து நிர்வாகிகளோடு, இணக்கமாகத்தான் போக முடியும். அதே போல் போக்குவரத்து அதிகாரிகள் தங்கள் கைகளில் இருந்து ஸ்டிக்கருக்கான செலவுகளை செய்யும் சூழல் ஏற்படுகிற போது போக்குவரத்துத் துறை ஆய்வாளர்களும், வேறு வழியின்றி தங்கள் பணிகளில் கண்டும் காணாமலும் தானே நடந்து கொள்ள நேரிடும். இதனால் ஊழல்கள் பெருகுவதோடு, பெருகும் விபத்துக்களும் தடுக்கப்பட முடியாமல் தானே போகும்.

எனவே வாகனத்தை ஏற்பாடு செய்து தருவதோடு, இந்த அதிகாரிகளின் பணிகளை முடித்து விட்டு, ஒதுங்கும் நிலையினை இந்த அரசே செய்து விட்டு, மேற்படியாக ஆகும் செலவினை, மற்ற அரசு துறைக்களுக்கான பொறுப்பில் விடப்படுமானால் இந்த போக்குவரத்து அதிகாரிகளால் பேருந்து நிர்வாகிகளோடு இணக்கமாக போகும் சூழல்கள் ஏற்படுவது தடுக்கப்பட்டு விபத்துக்கள் பெருகுவதும் குறைக்கப்படும்.

அதே நேரத்தில், அரசில், பத்திரப் பதிவுத் துறை, நெடுஞ்சாலைத்துறை, மாநகராட்சிகள், கனிமவள துறைகள் போன்ற பல துறைகள் லாபத்தில் இயங்கும் துறைகள் உள்ளன. இவற்றில் உள்ள அதிகாரிகளின் துணையுடன், அத்துறையில் உள்ள வசதி படைத்த காண்டிராக்டர்கள் மற்றும் தொண்டுள்ளம் கொண்டோர் மூலம் இது போன்ற விழாக்களுக்கு ஏற்படும் இந்த போக்குவரத்துச் செலவை பகிர்ந்தளிக்கலாமே.

இதனாலும் ஊழல்கள் தடுத்து நிறுத்தப் படும் . விபத்துக்கள் தவிர்க்கப்படும். தேவையற்ற போராட்டங்கள் மூலம் அரசுக்கு அவப்பெயர் ஏற்படாமல் இருக்கும். போக்குவரத்துத் துறை அதிகாரிகளின் பெரும் பணிச்சுமையும், மன உளைச்சலும் இல்லாமல் போகும். மேலும், எல்லாவற்றையுமே போக்குவரத்து துறை அதிகாரிகளேதான் பார்க்க வேண்டும் என்றால் மோட்டார் வாகன அதிகாரிகள் எங்கு தான் செல்வார்கள் ? எனவே.....

இவையனைத்தையும், போக்குவரத்து அமைச்சரும், திறமையான, நேர்மையான கமிஷனரான நிர்மல்ராஜ் அவர்களும் தீர ஆய்வு செய்து முதல்வரின் கவனத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

கண்டிப்பாக, தமிழகத்தில் நல்லாட்சி புரிந்து கொண்டிருக்கும் முதல்வர் மு.க.ஸ்டாவின் அவர்கள் கனிவுடன் பரீசீலித்து சிறப்பான முடிவினை எடுப்பார் என்றே நமக்குத் தோன்றுகிறது.

செய்வார்களா அமைச்சரும், ஆணைய ரும் ? துறை அதிகாரிகளின் துயர் துடைப்பார்களா ? நல்லதே நடக்கும் என்று நம்புவோம்.

– நெல்லை கோபால் மூத்த பத்திரிகையாளர்